

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை

**மானியக் கோரிக்கை எண் : 21**

## அறிவிப்புகள்
## 2019 - 2020

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை

மானியக் கோரிக்கை எண் : 21

## அறிவிப்புகள்
## 2019 - 2020

எடப்பாடி கே. பழனிசாமி
முதலமைச்சர்

**1. சென்னை பெருநகர பகுதியில் 9 இடங்களில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு, பாலங்கள் கட்டவும் மற்றும் ஒரு இணைப்புச் சாலை அமைக்கவும், ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கை ரூபாய் 2.35 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்**

**மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** சென்னை பெருநகர பகுதியில் (i) ஹால்டா சந்திப்பு முதல் அடையார், பசுமை வழிச்சாலை மற்றும் சாந்தோம் நெடுஞ்சாலை வழியாக கலங்கரை விளக்கம் வரை, (ii) வடபழனியிலிருந்து போரூர் வரை (iii) சின்னமலை முதல் வேளச்சேரி புறவழிச்சாலை வரை, (iv) அம்பத்தூர் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் சந்திப்பு, (v) வால்டாக்ஸ் சாலையில் பேசின் பால சந்திப்பு, (vi) அம்பேத்கர் கல்லூரி அருகில் வியாசர்பாடி சந்திப்பு ஆகிய இடங்களில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கும் மற்றும் அடையாரில் உள்ள திரு.வி.க.பாலம் முதல் மறைமலை அடிகள் பாலம் வரை அடையாற்றை ஒட்டி

புதிய இணைப்புச் சாலை அமைக்கவும் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை ரூபாய் 1.70 கோடியில் தயாரிக்கப்படும்.

திருமங்கலம் – முகப்பேர் சாலையில் உள்ள DAV பள்ளி மற்றும் வேலம்மாள் பள்ளி அருகில் நடைமேம்பாலம் அமைக்கவும் அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து பணிமனை அருகில் சாலை மேம்பாலம் அமைக்கவும் விரிவான திட்ட அறிக்கை ரூபாய் 65 இலட்சத்தில் தயாரிக்கப்படும்.

**2. ஒன்பது மாவட்டங்களில், 32 இடங்களில் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலங்கள் கட்டுவதற்கு ரூபாய் 3.50 கோடி செலவில் திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்**

**மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** திருவண்ணாமலை மாவட்டத்தில் சித்தாத்தூர், விழுப்புரம் மாவட்டத்தில் மரக்காணம் மற்றும் தாயனூர், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பாலக்கொல்லை மற்றும் கு.கள்ளக்குறிச்சி, பெரம்பலூர் மாவட்டத்தில் கீழ்பெரம்பலூர், ஈரோடு மாவட்டத்தில் பவானி மற்றும் கீழ் பவானி வாய்க்கால் பகுதியில் 9 பழமையான பாலங்களுக்கு பதிலாக புதிய பாலங்கள், கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சியில் 9 தரைப்பாலங்களுக்கு பதிலாக புதிய பாலங்கள், சேலம் மாவட்டத்தில் தெடாவூர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் காளியப்ப கவுண்டன்புதூர், திருச்சி மாவட்டத்தில் இ.புதூர், ஓமந்தூர் மற்றும் எடையாத்துமங்கலம், கிளிக்கூடு கிராமங்களை இணைக்கும் வகையில் பாலம், புதுகோட்டை மாவட்டத்தில் கீழ்குடி மற்றும்

பெருமருதூர் கிராமங்களை இணைக்கும் வகையில் பாலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் தென்பெரம்பூர் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் உள்ள **32** ஆற்று பாலங்களை புதுப்பித்து கட்ட விரிவான திட்ட அறிக்கை ரூபாய் **3.50** கோடியில் தயாரிக்கப்படும்.

## 3. இரயில்வே மேம்பாலங்கள் 3 இடங்களில் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை ரூபாய் 1.08 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்

**மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** மதுரை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் 3 இரயில்வே மேம்பாலங்கள் புதிதாக கட்ட விரிவான திட்ட அறிக்கை ரூபாய் 1.08 கோடியில் தயாரிக்கப்படும்.

## 4. சாலை மேம்பாலங்கள் 7 இடங்களில் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

**மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** காஞ்சிபுரம் மாவட்டத்தில் படப்பை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒசூர் உள்வட்ட சாலை, ஈரோடு மாவட்டத்தில் எஸ்.எஸ்.வி.என்.பள்ளி முதல் சுவஸ்திக்கார்னர் வரை, தேனி மாவட்டத்தில் நேரு சிலை, திருப்பூர் மாவட்டத்தில் சந்தைப்பேட்டை, மதுரை மாநகரில் மாட்டு தாவணி பேருந்து நிலையம் மற்றும் அண்ணா பேருந்து நிலையம் ஆகிய 7 இடங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க சாலை மேம்பாலங்கள் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

## 5. புறவழிச்சாலைகள் 10 நகரங்களில் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

**மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** விழுப்புரம் மாவட்டத்தில் அவலூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டத்தில் விருதாச்சலம், தர்மபுரி மாவட்டத்தில் பாப்பாரப்பட்டி, சேலம் மாவட்டத்தில் ஜலகண்டாபுரம், திருப்பூர் மாவட்டத்தில் அவிநாசி, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், திருச்சி மாவட்டத்தில் துறையூர் (பகுதி–3), தேனி மாவட்டத்தில் தேனி மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய 10 நகரங்களுக்கு புறவழிச்சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

## 6. ரூபாய் 155.80 கோடி மதிப்பில் 17 மாவட்டங்களில் 42 ஆற்றுப்பாலங்கள் கட்டப்படும்

**மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** 17 மாவட்டங்களில் உள்ள 379 கிராமங்களில் வசிக்கும் 9,59,356 மக்கள் பயனடையும் வகையில், ரூபாய் 155.80 கோடி மதிப்பீட்டில் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 42 ஆற்றுப்பாலங்கள் கட்டப்படும்.

## 7. 1456 கி.மீ நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தப்படும்

**மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** 1456 கி.மீ. நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்து மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தப்படும்.

## 8. சென்னை பெருநகர பகுதியில் 2 சாலைப்பணிகள் மற்றும் 2 மேம்பாலங்கள் ரூபாய் 409 கோடி மதிப்பில் கட்டப்படும்

**மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** கிழக்கு கடற்கரைச் சாலை மற்றும் திருவான்மியூர் லேட்டிஸ் பால சாலை சந்திக்கும் இடத்தில் மேம்பாலம் கட்டும் பணி, கிழக்கு கடற்கரைச் சாலையை நான்கு வழித் தடத்திலிருந்து ஆறு வழித்தடமாக அகலப்படுத்தும் பணி மற்றும் தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலை பணி ஆகியவை ரூபாய் 299 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், சென்னை, இராஜீவ் காந்தி சாலையில் டைடல் பார்க் சந்திப்பில் இரண்டு “U” வடிவ மேம்பாலங்கள் ரூபாய் 110 கோடி மதிப்பில் கட்டப்படும்.

9. சென்னை பெருநகர பகுதியில் 13 மேம்பாலங்கள், 2 இரயில்வே பாலங்கள், 2 நடை மேம்பாலங்கள் மற்றும் 1 ஆற்றுப்பாலம் ஆகிய 18 பணிகளை மேற்கொள்ள முதற்கட்டமாக நிலம் கையகப்படுத்தும் பணிகள் ரூபாய் 1122 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்

**மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** சென்னை பெருநகர பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் காட்டுபாக்கம், அக்கரை, அம்பத்தூர், ஆவடி, மாதவரம், இராமாபுரம், குன்றத்தூர், கைவேலி, சேலையூர், கொரட்டூர், வடபழனி – P.T. ராஜன் சாலை சந்திப்பு, மத்தியகைலாஷ் மற்றும் மடிப்பாக்கம் ஆகிய 13 இடங்களில் சாலை மேம்பாலம், பாடிகுப்பத்தில் ஒரு உயர்மட்ட பாலம், கேந்திரிய வித்தியாலயா (FOB) மற்றும் தாம்பரத்தில் உயர்மட்ட நடைபாதை (Sky walk), கொரட்டூரில் ஒரு இரயில்வே மேம்பாலத்தை அகலப்படுத்துதல் மற்றும் அம்பத்தூரில் இரயில்வே மேம்பாலம் ஆகிய பணிகள்

சென்னை போக்குவரத்து நெரிசலை குறைக்கும் திட்டத்தில் (Chennai City Traffic Decongestion Project (CCTDP)) புதிய வளர்ச்சி வங்கியின் (NDB) நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கு தேவைப்படும் நிலங்களை கையகப்படுத்தும் பணிகள் முதற்கட்டமாக ரூபாய் **1122** கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்

## 10. செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் (PBMC) மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் சாலைகள் பராமரிக்கப்படும்

**மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** சாலைகளை நல்லமுறையில் பராமரிப்பதற்காக செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் (PBMC) மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகள் பராமரிக்கப்படும்.

## 11. பழநியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டாயுதபாணி கோயிலுக்கு செல்லும் சாலைகளில் ரூபாய் 58.50 கோடி மதிப்பில் மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்படும்

**மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** திண்டுக்கல் மாவட்டத்தில் பழநியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டாயுதபாணி கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு பயன்படும் வகையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு இக்கோயிலுக்கு செல்லும் சாலைகளில் மேம்பாட்டு பணிகள் ரூபாய் **58.50** கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

## 12. சாலை பாதுகாப்புப் பணிகள் ரூபாய் 300 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்

**மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** நடப்பாண்டில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு (CRIDP) திட்டத்தில் ரூபாய் 200 கோடி மதிப்பிலும், சாலை பாதுகாப்பு நிதியில் இருந்து ரூபாய் 100 கோடி மதிப்பிலும் ஆக மொத்தம் ரூபாய் 300 கோடி மதிப்பிலான சாலை பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 13. அலுவலகக் கட்டடங்கள் மற்றும் அலுவலக குடியிருப்புகள் ரூபாய் 26.50 கோடி மதிப்பில் கட்டப்படும்

**மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** நெடுஞ்சாலைத்துறையின் பயன்பாட்டிற்காக திருவாரூர் கோட்ட அலுவலகம், திருத்துறைபூண்டி, குடவாசல், முசிறி, லால்குடி, அரியலூர், பாபநாசம், திருவிடைமருதூர், சீர்காழி, நம்பியூர், மடத்துக்குளம், திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு ஆகிய இடங்களில் 12 உட்கோட்ட அலுவலக கட்டடங்கள், தரங்கம்பட்டியில் பிரிவு அலுவலகம் மற்றும் சேலம் நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகுக்கு வட்டம் மற்றும் கோட்ட அலுவலகம் ஆகிய 16 கட்டடப்பணிகள் ரூபாய் 4.60 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட சாலை திட்டம், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம், தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் மற்றும் தமிழ்நாடு

சாலை மேம்பாட்டு கழகம் ஆகிய அலுவலகங்களுக்கு சென்னையில் ரூபாய் 13 கோடி மதிப்பில் அலுவலகக்கட்டடம் மற்றும் ரூபாய் 8.90 கோடி மதிப்பில் தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு சென்னையில் 14 எண்ணிக்கையிலான குடியிருப்பு கட்டடங்கள் கட்டப்படும். மேலும் மழைநீர் வடிகால் சேகரிப்பு மற்றும் கழிவு நீரை மறுசுழற்சி முறையில் பயன்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.

## 14. தரக்கட்டுபாட்டு உட்கோட்டங்களுக்கு 42 வாகனங்கள் ரூபாய் 3.90 கோடியில் வாங்கப்படும்

**மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** சாலை மற்றும் பாலப்பணிகளின் தரத்தை ஆய்வு செய்வதற்காக 42 தரக்கட்டுப்பாட்டு உட்கோட்டங்களுக்கு ஈப்புகள் ரூபாய் 3.90 கோடியில் வாங்கப்படும்

## 15. நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளிப்பதற்கு 68 புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும்

**மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய பயிற்சி நிலையத்தில், நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுக்கு தொடர்ச்சியாக பயிற்சிகள் அளிப்பதற்கு 26 பதவிகளில் 68 புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும்